**இனிமையான குழந்தைகளே! கள்ளங்கபடமற்றவர் ஒரே ஒரு தந்தை மட்டுமே ஆவார், அவர் உங்களது புத்தி என்ற பையில் ஞான இரத்தினங்களை நிரப்புகின்றார், அவரே கல்ப விருட்சத்தின் விதையாக இருக்கின்றார், அவரை யாருடனும் ஒப்பிட முடியாது.**

கேள்வி: பல குழந்தைகள் தந்தையையும் ஏமாற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். எப்படி மற்றும் ஏன்?

பதில்: தந்தையை யதார்த்த முறையில் அறிந்து கொள்ளாத காரணத்தினால் தவறு செய்து விட்டு மறைத்து விடுகின்றனர், உண்மை கூறுவது கிடையாது, சபையில் மறைந்து அமர்ந்து விடுகின்றனர். தர்மராஜர் பாபா அனைத்தையும் அறிவார் என்பது அவர்களுக்கு தெரியவே யில்லை. சத்திய தந்தையிடம் சத்தியத்தை கூறுவதும் தண்டனையைக் குறைத்துக் கொள்வதற்கான யுக்தியாகும்.

பாடல்: கள்ளங்கபடமற்றவர் தனிப்பட்டவராக இருக்கின்றார் ......

ஓம்சாந்தி. கள்ளங்கபடமற்றவர் என்று சதா சிவபாபா தான் கூறப்படுகின்றார் என்பதை குழந்தைகள் புரிந்து கொண்டீர்கள். சிவன் கள்ளங்கபடமற்றவர், களஞ்சியம் (பொக்கிஷம்) நிறைந்தவர். சங்கரை கள்ளங்கடமற்றவர் என்று கூறுவது கிடையாது. வேறு யாரையும் ஞானக் கடல் என்று கூற முடியாது. நான் வந்து தான் குழந்தைகளுக்கு முதல், இடை, கடையின் ஞானம் சொல்கிறேன் என்று தந்தை கூறுகின்றார். ஆக ஒரே ஒருவர் தான் ஞானக் கடலாக ஆகிவிடுகிறார் அல்லவா! சங்கரும் கிடையாது, அவ்யக்த பிரம்மாவும் கிடையாது. அவ்யக்த பிரம்மா சூட்சுமவதனத்தில் இருக்கின்றார். தாதாவை பகவான் பிரம்மா என்று ஏன் கூறுகின்றனர்? பலர் இந்த விசயத்தில் குழப்பமடைகின்றனர். ஆனால் அவ்யக்த பிரம்மாவை யும் பகவான் என்று கூற முடியாது. நான் தான் உங்களது பரலௌகீக தந்தை என்று தந்தை இப்போது புரிய வைக்கின்றார். பரலோகம் என்று சொர்க்கத்தையோ, நரகத்தையோ கூறுவது கிடையாது. பரலோகம் என்றால் வெகு தொலைவில் இருக்கக் கூடிய லோகமாகும், அங்கு ஆத்மாக்கள் வசிக்கின்றன, அதனால் தான் அவரை பரம பிரியமான, பரலௌகீக பரமபிதா என்று கூறுகின்றனர். ஏனெனில் அவர் பரலோகத்தில் இருக்கக் கூடியவர். பக்தி மார்க்கத்தில் உள்ளவர்களும் பிரார்த்தனை செய்கின்றனர் எனில் அவசியம் கண்கள் மேலே செல்லும். ஆக நான் முழு கல்ப விருட்சத்திற்கும் விதையாக இருக்கிறேன் என்று தந்தை புரிய வைக்கின்றார். ஒரு சிவனைத் தவிர வேறு யாரையும் படைப்பவர் என்று கூற முடியாது. அவர் ஒருவரே படைப்பவர், மற்ற அனைவரும் அவரது படைப்புகளாகும். படைப்பவர் தான் படைப்புகளுக்கு ஆஸ்தி கொடுப்பார். என்னை ஈஸ்வரன் அல்லது குதா (கடவுள்) பெற்றெடுத்தார் என்று அனைவரும் கூறுகின்றனர். ஆகவே தான் அந்த ஒரு ஈஸ்வரனை அனைவரும் தந்தை என்று கூறுகின்றனர். காந்தியை தந்தை என்று கூறமாட்டார்கள். எல்லையற்ற படைப்பவர் ஒரே ஒரு தந்தை மட்டுமே ஆவார். நான் உங்களது பரலௌகீக பரம்பிதா என்று அவரே புரிய வைக் கின்றார். மற்ற அனைத்து ஆத்மாக்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன, சிறியது பெரியதாக ஆவது கிடையாது. ஞான சூரியன், ஞான சந்திரன், ஞான நட்சத்திரம் ...... அந்த சூரியன், சந்திரனின் அளவில் வித்தியாசம் இருக்கிறது, ஆனால் ஆத்மாக்களின் அளவு ஒரே மாதிரி

யானது. நான் அளவில் பெரியதாக கிடையாது என்று பாபா கூறுகின்றார். ஆனால் பரந்தாமத் தில் இருக்கக் கூடியவன், அதனால் தான் என்னை பரம் ஆத்மா என்று கூறுகின்றனர். பரமாத்மா விடம் தான் முழு ஞானமும் இருக்கிறது. நான் எப்படி அசரீரியாக இருக்கிறேனோ அதே போன்று ஆத்மாவும் சிறிது காலத்திற்கு பரந்தாமத்தில் அசரீரியாக இருக்கிறது என்று அவர் கூறுகின்றார். (உலக) மற்றபடி மேடையில் அதிக நேரம் இருப்பது கிடையாது. ஆக எப்படி ஆத்மாக்களாகிய நீங்கள் நட்சத்திரம் போன்று இருக்கிறீர்களோ அதே போன்று நானும் இருக்கிறேன். ஒருவேளை நான் பெரியதாக இருந்தால் இந்த சரீரத்தில் வர முடியாது. எவ்வாறு மற்ற அனைத்து ஆத்மாக்களும் நடிப்பு நடிப்பதற்கு வருகின்றனரோ அதே போன்று நானும் வருகிறேன். பாபாவிற்கு பக்தி மார்க்கத்தி-ருந்து நடிப்பு ஆரம்பமாகிறது. சத்யுகம், திரேதாவில் நடிப்பே கிடையாது. இப்போது சுயம் வந்து நமக்கு முழு ஆஸ்தி கொடுக்கின்றார். தன்னை விட இரண்டு படி மேலே அழைத்துச் செல்கிறார். நம்மை பிரம்மலோகம் மற்றும் உலகம் இரண்டிற்கும் எஜமானர்களாக ஆக்குகின்றார். ஒவ்வொரு குழந்தையையும் தகுதியான வராக ஆக்குவது தந்தையின் கடமையாகும். எவ்வளவு சேவை செய்கின்றார்! சிலருக்கு 7 குழந்தைகள் இருப்பர், சிலர் டாக்டராக, இன்ஜினியராக, வழக்கறிஞராக ஆகின்றனர் எனில் தந்தை மலர் தூவமாட்டார். தந்தை அனைத்து குழந்தைகளைக்கும் கற்பித்து தகுதியானவர் களாக ஆக்கி விட்டார் என்று மனிதர்கள் அவருக்கு மகிமை செய்வர். ஆனால் அனைவரும் ஒரே மாதிரியாக ஆவது கிடையாது. சிலர் ஒரு விதமாக, சிலர் வேறு விதமாக ஆகின்றனர். அதே போன்று நானும் உங்களை எவ்வளவு தகுதியுடையவர்களாக ஆக்குகிறேன் என்று பாபா கூறுகின்றார். இந்த பாபாவைப் பாருங்கள் எப்படி இருக்கின்றார்! இவருக்கு (சிவபாபா) ஸ்தூல பெயர், ரூபம் எதுவும் கிடையாது. மற்றவரது சரீரத்தில் பிரவேசம் செய்து கற்பிக்கின்றார். இது கல்பத்திற்கு முந்தையப் போன்று அதே பாடசாலையாகும். ஆக அவசியம் கீதையின் பகவான் கீதாபாடசாலை உருவாக்கியிருக்கின்றார். இங்கு அனைவருக்கும் ஞானம் என்ற புல் (உணவு) ஞான அமிர்தம் ஊட்டுகின்றார். சிலர் கிருஷ்ணர் பசுமடம் என்று கூறுகின்றனர். சிலர் பிரம்மாவினுடையது என்று கூறுகின்றனர். ஆனால் சிவபாபாவிற்கு சரீரம் இல்லாத காரணத் தினால் பிரம்மா என்று கூறிவிட்டனர். மற்றபடி கிருஷ்ணர் பசுக்களை வளர்க்க வேண்டிய அவசியமில்லை. கிருஷ்ணரை பதீத பாவன் என்று கூறுவது கிடையாது. காந்தியும் கீதையை எடுத்துக் கொண்டு வாயில் சீதாராம் என்று கூறிக் கொண்டே இருந்தார். ஏனெனில் அவர்கள் இராமர், கிருஷ்ணர், ஆமை, மீன் அனைத்தும் பகவான் என்ற ஏற்று கொள்கின்றனர். முன்பு நாமும் இவ்வாறு புரிந்திருந்தோம். நமது புத்தியின் பூட்டும் பூட்டப்பட்டு இருந்தது. இப்போது தந்தை வந்து விழிப்படையச் செய்திருக்கின்றார். அனைவரையும் பிணக் குழியி-ருந்து வெளியில் எடுத்து கொசுக்களைப் போன்று திரும்பி அழைத்துச் செல்கிறார். பிறகு மீண்டும் அவரவர்களது நேரத்தில் சிறிது சிறிதாக இறங்குகின்றனர்.

என் ஒருவனை நினைவு செய்யுங்கள் என்று உங்களை தந்தை கூறுகின்றார். மாணவர் களுக்கும் தந்தை, ஆசிரியரின் நினைவு இருக்கும். உங்களுக்கு தந்தை கற்பிக்கின்றார். இவரே உங்களது குருவாகவும் இருக்கின்றார். மூன்று பேருடைய சக்தியும் இருக்கிறது. இருந்தாலும் இப்படிப்பட்ட தந்தையை மறந்து விடுகிறீர்கள். (முழு பக்குவமடைந்த பிராமணன் என்று கூறிக் கொள்ளும்)

குழந்தைகளும் 5 நிமிடம் கூட நினைவு செய்வது கிடையாது. அதனால் தான் ஆஹா, மாயா, நான் குழந்தைகளின் பூட்டை திறக்கிறேன், நீ பூட்டி விடுகின்றாய். சிறிது விகாரத் தில் சென்றாலும் புத்தி பூட்டு பூட்டப்பட்டு விடுகிறது. இருப்பினும் உண்மை கூறுவதன் மூலம் தண்டனை குறைந்து விடுகிறது. நீங்களே தானாகவே நீதிபதியிடம் சென்று தனது குற்றத்தைக் கூறினால் குறைவான தண்டனை கொடுப்பார். பாபாவும் இவ்வாறு செய்கின்றார், ஒருவேளை யாராவது தீய காரியங்கள் செய்து மறைத்து விட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும். ஆக தர்மராஜரிடம் எதையும் மறைக்கக் கூடாது. பலர் விகாரத்தில் செல்கின்றனர், பிறகு மறைந்து வந்து சபையில் அமர்ந்து விடுகின்றனர். ஆனால் தர்மராஜரிடத்தில் எதை மறைக்க முடியும்? நிச்சயம் இல்லையெனில் இப்படிப்பட்ட தந்தையையும் ஏமாற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். ஆனால் சாகாரமானவரை ஏமாற்றலாம், நிராகார பாபா அனைத்தையும் அறிவார். உங்களுக்கு இவரது உட-ன் மூலம் அறிவுரைகளையும் அவரே கொடுத்து கொண்டிருக்கின்றார். தாதாவின் உட-ல் பரமாத்மா எப்படி வருகின்றார்? என்று பலர் உங்களிடம் கேட்கின்றனர். அவர் இல்லறவாசியாக இருந்தார். குழந்தைகளும் இருந்தனர், இவரிடத்தில் எப்படி வருகின்றார்? ஏன் சாது, சந்நியாசிகளின் உட-ல் வரவில்லை? ஆனால் பரமாத்மா தூய்மையற்றவர்களை தூய்மை ஆக்க வேண்டும். அவர் பூஜாரியி-ருந்து பூஜைக்குரியவர்களாக ஆக்கிக்கொண்டிருக்கின்றார், இவரும் குட்டிகர்ண விளையாட்டு விளையாடுகின்றார். பிராமணர் கள் தான் தேவதைகளாக, பிறகு சத்ரியர்களாக, வைஷ்யர்...... இந்த வர்ணங்களும் பாரதத்தில் இருக்கின்றன. இப்போது நான் 15 நிமிடம் சொற்பொழி ஆற்றினேன், இவ்வாறு நீங்களும் புரிய வைக்க முடியும். பாபா நேரடியாக பேசுகின்றார், சிவபாபா இவ்வாறு புரிய வைக்கின்றார் என்று நீங்கள் கூறுவீர்கள். சிவன் வேறு, சங்கர் வேறு - இதையும் தெளிவாக புரிய வைக்க வேண்டும். இது பாபாவின் அறிமுகம் கொடுப்பதாகும். சட்டம் என்றால் சட்டம் தான் என்ற அரசாங்கம் கூறுவது போன்று சட்டம் என்றால் சட்டம் தான், நாடகத்தின் சட்டம் ஆகும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கர், பிறகு லெட்சுமி-நாராயணன், இராமர்-சீதை, பிறகு தர்மத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர்கள் என்று நாம் கூறுகிறோம். இதே முறையில் உலகம் பழையதாக ஆகிக் கொண்டே செல்கிறது. தேவதைகளாகிய நீங்கள் விகாரமார்கத்திற்கு சென்று விடுகிறீர்கள். இப்போது தந்தை வந்து விழிப்படையச் செய்கின்றார், அனைத்தையும் என்னிடத்தில் ப- கொடுத்து விடுங்கள் மற்றும் என் வழிப்படி நடங்கள் என்று கூறுகின்றார். அவர் கூறுவது தான் ஸ்ரீமத் என்று கூறுகிறோம்.

மற்றபடி லெட்சுமி-நாராயணன், இராமர்-சீதை, யாரை நினைவு செய்து வந்தோமோ அவர்கள் பக்தி மார்க்கத்திற்கு சென்று விட்டனர், பிறகு யார் ஸ்ரீமத் கொடுக்க முடியும்? பக்தர்களின் மன ஆசைகளையும் பாபா தான் நிறைவேற்றுகின்றார். ஆமை, மீன் மீதும் யாராவது பாவனை வைத்திருக்கலாம், இருப்பினும் அவர்களது பாவனைகளையும் நான் தான் நிறைவேற்று கின்றேன். ஆமை, மீன் போன்ற அனைத்திலும் பகவான் இருக்கிறார் என்பது தான் அதன் பொருளாகிவிடுகிறது. பாபா பல ரகசியங்களைப் புரிய வைக்கின்றார். ஆனால் புரிந்து கொள்பவர்களில் வரிசைக்கிரமம் இருக்கிறது, பதவியும் வரிசைக்கிரமமாக இருக்கிறது. இங்கு

தெய்வீக இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறதே தவிர தர்மம் அல்ல. மற்ற தர்மத்தினர்கள் தான் தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றனர். சிவபாபா பிரம்மாவின் மூலம் இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குகின்றார். இராஜாவிற்கெல்லாம் இராஜா என்பதன் பொருளும் உங்களுக்கு புரிய வைக்கப்பட்டிருக்கிறது. உங்களை விகாரமுள்ள இராஜாக்கள் பூஜை செய்கின்றனர். ஆக உங்களுக்கு எவ்வளவு உயர்ந்த பதவி கிடைக்கிறது! பாபாவின் இனிமையிலும் இனிய விசயங்கள் உங்களுக்கு மிகவும் பிரியமானதாக இருக்கிறது. இருப்பினும் எழுந்து டீ குடித்ததும் போதை குறைந்து விடுகிறது. ஊருக்கு சென்றதும் முற்றிலும் நீங்கி விடுகிறது. இங்கு நீங்கள் சிவபாபாவின் வீட்டில் அமர்ந்திருக்கிறீர்கள். அங்கு அதிக வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. கணவன் அயல்நாடு செல்கின்ற போது மனைவி கண்ணீர் விடுவாள். அவர் எந்த சுகமும் கொடுப்பது கிடையாது. இந்த பாபா உங்களுக்கு எவ்வளவு சுகம் கொடுக்கின்றார்! ஆக இவரை விட்டு செல்லும் போதும் அழுகை வருகிறது. நாம் இங்கேயே அமர்ந்து விடுகிறோம் என்று பலர் கூறுகின்றார். பிறகு உங்கள் குழந்தைகள் எங்கு செல்வார்கள்? நீங்கள் பராமரியுங்கள் என்று கூறுகின்றனர். நான் எத்தனை பேருடைய குழந்தைகளை பாதுகாப்பது? ஆனால் சேவாதாரியாகி இருங்கள், அப்போது உங்களது குழந்தைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு விடும். ஆரம்பத்தில் குறைவானவர்கள் இருந்தனர், ஆகையால் அவர்களது குழந்தைகளை கவனிக்க முடிந்தது. இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர்! அவர்களது குழந்தைகளை உட்கார்ந்து கவனிக்கும் போது, யாராவது காணாமல் போய் விட்டால் எங்களது குழந்தைகளை தொலைத்து விட்டீர்கள் என்று கூறுவீர்கள். பாது காப்பதற்கு யாரை வைக்கின்றோமோ அவரும் மற்றவர்களது கர்ம பந்தனைங்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்? என்று கேட்கின்றனர். நல்லது, ஒரே ஒரு சிவன் என்ற குழந்தையை கவனியுங்கள், பிறகு அவர் உங்களது குழந்தைகளை கவனித்துக் கொள்வார். மற்றபடி இப்படிப்பட்ட பாபாவை ஒருபோதும் விட்டு சென்று விடக் கூடாது. இவ்வாறு பலர் விட்டு சென்று விட்டனர். அவர்களை முட்டாள் அவதாரம் என்று கூறலாம். பிரம்மா குமார், குமாரியிடம் வேண்டுமென்றால் கோபித்துக் கொள்ளுங்கள், ஆனால் சிவபாபாவிடம் ஒருபோதும் கோபித்துக் கொள்ளாதீர்கள். அவர் உங்களுக்கு இராஜ்ய பாக்கியம் கொடுக்க வந்திருக்கின்றார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாதாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தன்னிடமுள்ள அனைத்தையும் தந்தையிடம் அர்பணித்து முழுமையாக ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். எந்த ஒரு தீய காரியமும் செய்து விட்டு மறைக்கக் கூடாது. நீதிபதியிடம் உண்மையை கூறுவதன் மூலம் தண்டனை குறைந்து விடும்.

2) தந்தையிடம் ஒருபோதும் கோபித்து கொள்ளக் கூடாது. சேவாதாரிகளாக ஆக வேண்டும். தனது கர்மபந்தனங்களை தானே துண்டித்துக் கொள்ள வேண்டும்.

வரதானம் சங்கமயுகத்தின் ஒவ்வொரு நொடியையும் உற்சவமாக

: கொண்டாடுபவராகி எப்போதும் ஊக்கம்-உற்சாகம் நிரம்பப் பெற்றவராகுக

உற்சவம் எதுவாயினும் ஊக்கம் உற்சாகத்திற்காகவே கொண்டாடப்படுகிறது. பிராமணக் குழந்தைகளான உங்களது வாழ்க்கையே உற்சாகம் நிறைந்த வாழ்க்கையாகும். உட-ல் உயிர் இருந்தால் வாழ்க்கை ஆகும். அப்படியே பிராமண வாழ்வின் உயிரே ஊக்கம் உற்சாகம் தான். எனவே சங்கமயுகத்தின் ஒவ்வொரு நொடியும் உற்சவமே. ஆனால் சுவாசத்தின் வேகம் என்றும் சீராக ஏக்ரஸ், இயல்பாக இருக்க வேண்டும். மாறாக சுவாசத்தின் வேகம் இயல்பு நிலைக்கு மாறாக அதிகமாகவோ, குறைவாகவோ இருந்தால் வாழ்வாகாது. எனவே பிராமண வாழ்வில் ஊக்கம், உற்சகாத்தின் வேகம் சீரான நிலையில் ஏக்ரஸ் இயல்பாக உள்ளதா என சோதனை செய்யுங்கள்.

சுலோகன்: சர்வ சக்தியெனும் பொக்கிசங்களால் நிரம்பி இருப்பது - இதுவே பிராமண வாழ்வின் சிறப்பம்சம் ஆகும்..

மாதேஷ்வரிஜீயின் விலைமதிப்பற்ற மகாவாக்கியங்கள்

1) பகவான் வருவது ஏற்கெனவே உருவாக்கப்பட்ட நிகழ்ச்சியாகும்

கீதையின் பகவானே! தனது வாக்குறுதியை கடைபிடிப்பதற்கு வந்து விடுங்கள் என்று மனிதர்கள் பாட்டு பாடுகின்றனர். இப்போது அந்த கீதையின் பகவான் சுயம் தனது முந்தைய கல்பத்தின் வாக்குறுதியைக் கடைபிடிப்பதற்காக வந்திருக்கின்றார். ஹே குழந்தைகளே! எப்போது பாரதத்தில் அதிக தர்ம நிந்தனை ஏற்படுகிறதோ அப்போது நான் இதே நேரத்தில் எனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக அவசியம் வருகிறேன் என்று கூறுகின்றார். நான் வருகிறேன் என்றால் ஒவ்வொரு யுகத்திலும் வருகிறேன் என்று பொருள் அல்ல. அனைத்து யுகங்களிலும் எந்த தர்ம நிந்தனையும் ஏற்படுவது கிடையாது. தர்ம நிந்தனை ஏற்படுவது க-யுகத்தில் தான், ஆக பரமாத்மா க-யுக காலத்தில் தான் வருகின்றார். மேலும் க-யுகம் கல்ப கல்பத்திற்கு வருகிறது, ஆக நான் கல்ப கல்பத்திற்கு வருகிறேன். கல்பத்தில் நான்கு யுகங்கள் உள்ளன. இதைத் தான் கல்பம் என்று கூறுகிறோம். அரைக் கல்பம் சத்யுகம், திரேதாவில் சதோ குணத்துடன் சதோ பிரதானமாக இருக்கின்றனர். அங்கு பரமாத்மா வர வேண்டிய அவசியமில்லை. மேலும் மூன்றாவது யுகமாகிய துவாபர யுகத்தி-ருந்து மற்ற தர்மங்கள் வர ஆரம்பித்து விடுகின்றன, அந்த காலக் கட்டத்தில் அதிக தர்ம நிந்தனை ஏற்படுவது கிடையாது. ஆக பரமாத்மா மூன்று யுகங்களிலும் வருவதே கிடையாது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகிறது. பாக்கி இருப்பது க-யுகம், இதன் கடைசியில் தான் அதிக தர்ம நிந்தனை ஏற்படுகிறது. இந்த காலத்தில் தான் பரமாத்மா வந்து அதர்மத்தை அழித்து சத்திய தர்மத்தை ஸ்தாபனை செய்கின்றார். ஒருவேளை துவாபரத்தி-ருந்து வந்திருக்கக் கூடும் எனில் துவாபரத்திற்கு பிறகு சத்யுகம் ஏற்பட்டிருக்க வேண்டும், ஏன் க-யுகம் ஏற்பட்டது? பரமாத்மா காரிருள் நிறைந்த க-யுகத்தை ஸ்தாபனை செய்தார் என்று கூறுவது கிடையாது. இவ்வாறு இருக்கவே முடியாது. ஆகையால் பரமாத்மா கூறுகின்றார் - நான் ஒரே ஒருவன், ஒரே

முறை தான் வந்து அதர்மத்தை அழித்து க-யுகத்தை விநாசம் செய்து சத்யுகத்தை ஸ்தாபனை செய்கிறேன், ஆக நான் வரக் கூடிய காலம் சங்கமயுகமாகும்.

2) அதிஷ்டத்தை உருவாக்கக் கூடியவர் பரமாத்மா, அதிர்ஷ்டத்தைக் கெடுக்கக் கூடியவர் சுயம் மனிதர்களே.

மனித ஆத்மாக்களின் அதிர்ஷ்டத்தை உருவாக்கக் கூடியவர் யார்? அதிர்ஷ்டத்தைக் கெடுப்பது யார்? என்பதை இப்போது நாம் அறிவோம். அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர், கெடுப்பவர் ஒரு பரமாத்மா தான் என்று நாம் கூறமாட்டோம். அதிர்ஷ்டத்தை உருவாக்குபவர் பரமாத்மா, அதிர்ஷ்டத்தை கெடுப்பது சுயம் மனிதர்களே. அதிர்ஷ்டம் எப்படி உருவாகிறது? பிறகு எப்படி இழக்கிறோம்? இது புரிய வைக்கப்படுகிறது. மனிதர்கள் எப்போது தன்னை உணர்கிறார்களோ மற்றும் தூய்மை ஆகிறார்களோ அப்போது இழந்து போன தனது அதிர்ஷ்டத்தை மீண்டும் உருவாக்கிக் கொள்கின்றனர். இழந்து போன அதிர்ஷ்டம் என்று நாம் கூறுகின்றோம் எனில் ஏதோ ஒரு காலத்தில் நாம் அதிர்ஷ்டசா-களாக இருந்திருக்கிறோம், அது இப்போது இழந்து விட்டோம் என்பது நிரூபனம் ஆகிறது. இப்போது இழந்த அதே அதிர்ஷ்டத்தை சுயம் பரமாத்மாவே வந்து உருவாக்குகின்றார். பரமாத்மா நிராகாரராக இருக்கின்றார் எனில் அவர் எப்படி அதிர்ஷ்டத்தை உருவாக்க முடியும்? என்று சிலர் கேட்கின்றனர். நிராகார பரமாத்மா எப்படி சாகார பிரம்மாவின் உடல் மூலம், அழிவற்ற ஞானத்தின் மூலம் நாம் இழந்த அதிர்ஷ்டத்தை உருவாக்குகின்றார்? என்பது பற்றி இப்போது புரிய வைக்கப்படுகிறது. இந்த ஞானம் கொடுப்பது பரமாத்மாவின் காரியமாகும், மற்றபடி மனித ஆத்மாக்களினால் ஒருவருக்கொருவரின் அதிர்ஷ்டத்தை உருவாக்கிட முடியாது. அதிஷ்டத்தை உருவாக்கக் கூடியவர் ஒரே ஒரு பரமாத்மா ஆவார். அதனால் தான் அவரது நினைவுச் சின்னமாக கோயில்கள் உள்ளன. நல்லது.